MR. CHAIRMAN : The time is up, Thiru C. V. Rajagopal. Only one hour is allotted for question-hour.

Hanks of Yarn

* 201. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) total number of hanks of yarn produced by Traditional Charka, Ambar Charka and Textool Charka—categorywise particulars under each year from 1962–63 to 1970-71 ;

(*b*) total number of spinners benefited under each category under each of the above years ;

(*c*) per-capita wages paid per day under each category for the above years ;

(*d*) per-capita hanks produced categorywise per year;

(*e*) split wage paid for, per hank categorywise ; and

(*f*) cotton content in weight per hank categorywise on an average ?

நூல் சிட்டங்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1962-63 முதல் 1970-71 வரை ஆண்டு வாரியாக முறையே கை ராட்டை, அம்பர் ராட்டை, யந்திர ராட்டை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூல் சிட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(இ) மேற்கண்ட ஒவ்வோர் ஆண்டிலும், ஒவ்வொரு வகையின் கீழும் நூல் நூற்போர் மொத்தம் எத்தனை பேர் பயனடைந்தனர்?

(உ) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு வகையின் கீழும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு?

(எ) ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபர் உற்பத்தி செய்த சிட்டங்களின் எண்ணிக்கையாது?

(ஐ) சிட்டம் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதிய வீதம் யாது?

(ஒ) சராசரியாக ஒரு சிட்டத்தில் அடங்கியுள்ள பஞ்சின் எடை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

512–513 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 22]

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, மொத்தம் விற்கப்பட்டது ரூ. 3,06,34,287. விற்பனையில் ரிபேட்டாகக் கொடுக்கும் நேரத்தில் விற்பனை செய்யப்பட்டது இரண்டு கோடியே சொச்சம் என்று காணப்படுகிறது. ஆகையினால் ரூபாய்க்கு பத்து பைசா ரிபேட் கொடுத்தாலொழிய விற்பனையும் உற்பத்தியும் அதிகப்படுவதில்லை என்று தெரிய வருகிறது. இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவு, மற்றத் துணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அதிகமாக இருக்கின்ற காரணத்தால் விற்பனை குறைவாக இருக்கின்றது. ஆகையினால்தான் அரசு உதவி செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, கதர் திட்டத்தின் முக்கிய அடிப்படை நோக்கங்களில் ஒன்று அதிகமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது. இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரக் கணக்குப் படி 1965-66-ல் மொத்தம் 265 லட்சம் சிட்டங்கள் நூற்கப்பட்டிருக்கின்றன. 1970-71-ல் 271 லட்சம்தான் நூற்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் அதிகமாக முன்னேற்றம் அடையவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பயன் அடைந்தவர்கள், நூற்போருடைய எண்ணிக்கை 1965-66-ல் 1,24,787. அம்பர் சர்க்கா மூலம், கை ராட்டை மூலமும் சேர்ந்து 1970-71-ல் 74,069 பேர் நூற்பவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். கிட்டதட்ட 50,000 பேர் வேலை இழந்திருப்பதாகத் தெரிகிறது. ஏன் என்று விளக்க வேண்டும். கதர் திட்டம் முன்னேற்றம் அடைகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நூற்பவர்களில் பலர் வேலை இழந்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு கொடுப்பது மட்டும் இந்தக் கதர் திட்டத்தின் நோக்கம் என்று சொல்லிவிட முடியாது. இயந்திரங்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு, நூற்போருக்கு ஊதியம் அதிகமாகக் கிடைக்கிறது. கை ராட்டைக்கு ஒரு நாள் கூலி 66 காசு. அம்பர் சர்க்காவில் செய்கின்றவர்களுக்கு 1-02 ஒரு நாளைக்குக் கூலி கொடுக்கப்படுகிறது. டெக்ஸ்டூல் சர்க்கா என்று வருகிற போது, நாள் ஒன்றுக்கு ரூ. 2 கிடைக்கிறது. இதற்கு நிதி அளிப்பதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அது வருகிறபோது மூன்று ரூபாய் கிடைக்கும். ஒவ்வொரு பிளாக் தோறும் விரிவு படுத்த திட்டம் இருக்கிறது. தாற்காலிகமாக இந்த இயந்திரத்தால் எந்த விதத்திலும் வேலை வாய்ப்பு குறையாது. கொஞ்சம் கொஞ்சமாக இயந்திர சாதனங்கள் வளர, வளர, கூலி உயர்வு அதிகமாகும்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, புள்ளி விவரக் கணக்கைப் பார்க்கின்றபோது, 50 ஆயிரம் பேருக்கு மேல் வேலை இழந்திருக்கிருர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிருர்களா ? அவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, மாற்று வேலை என்பதல்ல. இந்த அம்பர் ராட்டையும் டெக்ஸ்டுல் ராட்டையும் கொடுப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த டெக்ஸ்டுல் ராட்டைகளைப் புகுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பு குறைந்திருப்பதாக இருந்தாலும், அது தாற்காலிகமானதுதான். அதன் காரணமாக துணி உற்பத்தி அதிகமாகி, விற்பனையும் அதிகமாகி, வேலை வாய்ப்பு பெருகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, 1966-ஆம் ஆண்டுக்கும் 1971-ஆம் ஆண்டுக்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 1969-70, 1970-71-ல் பார்த்தால் 3,07,68,721 சிட்டங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. உற்பத்தி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, அம்பர் ராட்டையையும், டெக்ஸ்டுல் ராட்டையையும் போதுமான அளவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதற்குரிய சாதனங்களும் இயந்திரங்களும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஒரு சில இடங்களில் சோதனையாக வைத்திருக்கிருேம். எல்லா இடங்களிலும் சீக்கிரத்திலேயே நிறுவப்படும். அப்பொழுது வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், இந்த அம்பர் சர்க்கா, டெக்ஸ்டூல் ராட்டைகளை புகுத்துவதால் 50,000 பேர் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னுர்கள். அப்படி வேலை இழந்தவர்களுக்கு ஏதாவது மாற்று வேலை கொடுக்க அரசிடம் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசால் இப்பொழுதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிதி வசதி செய்வதாகச் சொல்லியிருக்கிருர்கள். இந்தத் திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் இந்த டெக்ஸ்டூர் ராட்டைகளைப் புகுத்த தொழிற்சாலை ஏற்படுத்த இருக்கிறது. அப்பொழுது அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

1972 ஆகஸ்ட் 22]

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, இதற்கு ஏதாவது காலம் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, காலம் குறிப்பிட்டுச் சொல்வது என்பது முடியாது. அது நம் கையில் இல்லை. கிசான் ராட்டைக்காக மத்திய அரசாங்கம் 20 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அவர்கள் சொல்லித்தான் இந்த டெக்ஸ்டூல் ராட்டைகள், அம்பர் ராட்டைகளை அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் சொல்கின்றபடிதான் ஓரளவுக்கு அனுசரித்துப் போகும் நிலைமையில் நாம் இருக்கிறோம். விரைவில் அதற்கான தொழிற்சாலைகளை அமைத்திட சம்மதித்திருக்கிறார்கள். நமது அரசாங்கம் அதில் தக்க கவனம் செலுத்தி வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூல் நூற்பதற்கு 66 காசு, அம்பர் ராட்டை, டெக்ஸ்டூர் ராட்டைகளில் நூற்பதற்கு ரூ. 1, ரூ. 2 என்று போடப்பட்டிருக்கிறது. அதனால் கிசான் ராட்டை வளர்ச்சி பெறுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அதைப்பற்றித் திட்டவட்டமாகக் கொள்கை அறிவித்திருக்கிறார்கள். இயந்திரத் திட்டம் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து வந்தால், மற்றத் துணிகளோடு போட்டி போடும் நிலைமைக்கு இந்தத் திட்டத்தை வளர்க்க முடியும். அத்தருணத்தில் வருமானமும் பெருகுவதற்கான வழி செய்யப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, கதர் அணிய வேண்டும் என்று சொன்னவர்களே கதர் அணிவதை மிகவும் குறைத்திருக்கிறார்கள். அதனால்தான் என்னவோ குறைந்திருக்கிறது. கதர் கட்டியவர்களும் குறைந்திருக்கிறார்கள். இந்தக் கருத்து உண்மைதானா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, புள்ளி விவரம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் எல்லா விவரங்களும் தெரியும்.

Tractor Training Centre

*202. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any tractor training centre is to be opened in this State ; and

(*b*) if so, the details thereof?